Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No CC .NO. 141 /2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.05, Page.No. 78/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி அமுல் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | நரசிம்மன் | தொழில் | தலைமைக்காவலர் |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | |
| மாவட்டம் | | வயது | 36 |
| **எதிரி ஆஜர்** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 11th day of August 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>அ.சா. 01 திரு. திருமதி அமுல் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருப்பத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.03.2022 பகல் 12.00 மணிக்கு நான் திருப்பத்தூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் இருந்த போது உதவி ஆய்வாளர் திரு ராஜசேகர் அவருடன் நானும் பெண் காவலர் சர்மிளா என்பவரும் திருப்பத்தூர் நகர காவல் எல்லைக்கு உட்பட்ட இடங்களுக்கு மதுவிலக்கு சம்பந்தமாக செல்லும்போது நகர காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட கௌதம் பேட்டை இடமாக செல்லும்போது பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி திருப்பதி மனைவி மகரஜோதிஎன்பவர் எங்களை கண்டதும் முயற்சித்த நபரை மடக்கி பிடித்து விசாரிக்கும் போது முன்னுக்கு பின்னாக விலாசத்தை கூறினார் அதனால் அவர் இருந்த இடத்தை சோதனை செய்யும் போது அவர் வீட்டிற்கு பின்புறம்90 ML கொள்ளவு கொண்ட old Secret XXX Rum எண்ணிக்கை 6 கர்நாடக மாநிலத்தை

சேர்ந்த பாக்கெட்டுகள் மேலும் 180 மில்லி லிட்டர் கொள்ளளவு கொண்ட டைமண்ட் xxx 6 பாட்டில்கள் இருந்தது மேலும் அதிகப்படியாக பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் விற்கப்பட்டதாக குற்றத்தை எதிரி ஒப்புக்கொண்டார் அதனால் அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்து 12.15 மணிக்கு எதிரியை காரணம் கைது செய்து 13 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டு குற்ற எண் 70/2020 கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவத்தில் சாட்சிகள் யாரும் முன் வராததால் எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் மேற்படி பொருட்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான் அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**குறுக்கு விசாரணை**

30.03.2022 அன்று ரோந்து பணிக்கு நாங்கள் காலை11.30 மணிக்கு கிளம்பி சிவராஜ் பேட்டைக்கு சென்று 12 மணிக்கு கௌதம் பேட்டைக்கு சென்றோம். நாங்கள் மூவரும் இரண்டு இருசக்கர வாகனங்களில் சென்றோம். என்னுடன் பணியாற்றிய பெண் காவலர் வாகனத்தை இயக்கினார் நான் பின்னால் அமர்ந்து சென்றேன் நான் கூறிய இரண்டு இடங்களை தவிர அன்றைய தினம் வேறு எங்கும் மதுவிலக்கு சம்பந்தமாக நாங்கள் ரோந்து பணி செல்லவில்லை என்றால் சரிதான். தட்டச்சு செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசர் சம்பவ இடத்திற்கு யார் எடுத்து வந்தார்கள் என்றால் உதவி ஆய்வாளர் எடுத்து வந்தார். நாங்கள் மதுவிலக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் இவ்வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் உதவி ஆய்வாளர் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரியின் வீட்டு விவரங்கள் எனக்கு சரிவர தெரியாது என்றாலும் எனவே நான் சம்பவத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. கௌதம் பேட்டை கிராமத்தில் பல வீடுகள் உள்ளன என்றாலும் அங்கு காலியிடங்கள் இல்லை என்றாலும் எனவே நான் பொய்யாக சாட்சியம் அளிப்பது புலப்படுகிறது என்றாலும் சரியல்ல.

Signature of Witness.